Spl.SC.No. 12/2020 Dated:. 25.09.2023

அ.சா. 1 வைரவவகேசு

A1 to A8 present.

311 மனுவின் கீழ் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பில் குறுக்கு விசாரணை

இராமநாதபுரத்தில் இருந்து தேவிப்பட்டிணம் எத்தனை கிமீ தூரம் உள்ளது என்றால் சுமார் 16 கிமீ தூரம் இருககும். நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தேவிப்பட்டிணம் ஊராட்சி என்றால் சரிதான். அந்த ஊரில் சுமார் 10000 பேர் குடியிருப்பார்கள் என்றால் இருக்கலாம். வேலுமாணிக்கம் பெட்ரோல் பங்கில் இருந்து தேவிப்பட்டிணம் சுமார் 10 கிமீ தூரத்தில் இருக்கும். தேவிப்பட்டிணத்தில்இருநது சக்கரவாளநல்லூர் 3 கிமீ தூரம் இருக்கும். 15.03.2020 அன்று கொரனா ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்தது என்றால் 20.03.2020 அன்றில் இருந்து ஊரடங்கு உத்தரவு இருந்தது. வேலுமாணிக்கம் பெட்ரோல் பங்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றால் தேவிப்பட்டிணம் செல்லலாம் என்றால் சரிதான். அது கிழக்கு கடற்கரை சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் தூத்துக்குடியில் இருந்து சென்னை வரை செல்லும வாகனங்கள் செல்லலாம் என்றால் சரிதான். இசிஆர் ல் இருந்து தொண்டி வழியாக திருச்சி செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். சக்கரவாளநல்லூர் வழியாதக தான் சென்னை மற்றும்திருச்சி செல்லும் வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். வேலுமாணிக்கம் பெட்ரோல் பங்க் ரோட்டின் மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். வேலுமாணிக்கம் பெட்ரோல் பங்கில் இருந்து சுமார் 500 மீ தூரத்தில் சாலையின் மேற்கில் வேலுமனோகரன் ஆர்ட்ஸ் காலேஜ் உள்ளது என்றால் சரிதான். அதன் எதிர் புறம் மரப்பாலம் என்ற கிராமம் உள்ளது என்றால் சரிதான். புல்லங்குடி பஸ் ஸ்டாப் மேற்கு புறமாக உள்ளது என்றால் சரிதான். புல்லங்குடி பஸ் ஸ்டாபில இருந்து 1 கிமீ தள்ளி ரோட்டின் வலது புறம் அண்ணா பல்கலைகழகம் உள்ளது என்றால் சரிதான். அண்ணா பல்கலைகழகம் எரிர் புறம் கூட்டாம்புளி பேருந்து நிலையம் உள்ளது. அதனை தள்ளி 1 கிமீ தொலைவில் செய்யது அம்மாள் கல்லூரி உள்ளது என்றால்

சரிதான். செய்யது அம்மாள் கல்லூரியில் இருந்து கோப்பேரிமடம் பஸ் ஸ்டாப் மற்றும் போலிஸ் செக் போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். இரவு நேரங்களில் செக் போஸ்டில் போலிஸ் இருப்பார்கள் என்றால் சரிதான். அங்கு சிசிடிவி கேமரா உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. சிசிடிவி கேமரா உள்ளது என்றும், வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோப்பேரிமடம் பஸ் ஸ்டாப்பின் வலது புறம் சித்தார்க்கோட்டைக்கு செல்ல ரோடு உள்ளது. அதிலிருந்து சற்று தள்ளி பாரத் பெட்ரோல் பங்க் உள்ளது என்றும் அதில் சிசிடிவி உள்ளது என்றால் பங்க் உள்ளது சிசிடிவி உள்ளதா என்று எனக்கு தெரியாது. பாரத் பெட்ரோல் பங்கில் இருந்து ரணபலி முருகன் கோவில் செல்லும் ஆர்ச் உள்ளது என்றால் சரிதான். அதன் எதிர் புறம் ஷிபான் நூர் குளோபல் பள்ளி உள்ளது என்றால் சரிதான். ரணபலி முருகன் கோவில் ஆர்ச் அருகே பெருவயல் கிராம பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். அங்கிருந்து சுமார் 1 கிமீ தொலைவில் ஆதிகேசவ பெருமாள் கோவில் செல்லுமஆர்ச் உள்ளது என்றால் சுமார் 750 மீ தூரத்தில் உள்ளது. அதன் மேற்கு பக்கம் சென்றால் சக்கரவாளநல்லூர் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆர்ச்சிற்கு எதிர் புறம் இராமநாதபுரம் செல்லும் பஸ் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். தேவிப்பட்டிணம் செல்வதற்கும் ஆர்ச் அருகே பஸ் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். ஆர்ச்க்கு முன்னாடி தர்ம முனிஸ்வரர் கோவில் உள்ளது என்றால் சரிதான். வேலுமாணிக்கம் பெட்ரோல் பங்கில் இருந்து ஆதிகேசவ பெருமாள் கோவில் ஆர்ச் செல்லும் வரை இருபக்கங்களிலும் மேற் சொன்ன கட்டிடங்களை தவிர வேறு கட்டிடம் இல்லாத காலி நிலம் என்றால் உப்பளம் மற்றும் விவசாய நிலம் உள்ளது. TN 65 AK 6018 என்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ், என் மகனின் ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு சான்றிதழ் ஆகியவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. என் மகன் இராமநாதபுரத்திற்கு உதிரி பாகங்கள் வாங்க செல்வதாக எந்த கடைக்கு சென்றார் என்றால் கடையை குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் புகார் கொடுக்கும்போதோ, போலிசார் என்னை விசாரிக்கும் போதோ என் மகன் உதிரி பாகம் வாங்க இராமநாதபுரத்திற்கு சென்றார் என்று சொன்னேனா என்றால் புகாரில் சொல்லவில்லை போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை. என்னை போலிசார் 2 முறை விசாரித்தார்கள். 22 ம் தேதி 03.00 மணிக்கு காவல்நிலையத்திலும், ஒரு வாரம்

கழித்தும் என்னை டிஎஸ்பி விசாரித்தார். 2 முறை என்னை விசாரித்தபோதும் மேற்படி எதிரிகளை தெரியும் என்று நான் சொல்லியுள்ளேன். நான் புகார் கொடுக்கும் போதும் 2 முறை என்னை போலிசார் விசாரணை செய்தபோதும், எதிரி பாலா என்ற பாலமுரளி கிருஷ்ணா மணல் வழக்கில் ஜெயிலுக்கு போவதற்கு முன்பு என் மகனை போனில் தொடர்பு கொண்டு பள்ளத் தேவுடியா மகனே என் வண்டியை பிடித்து கொடுத்துவிடடாயடா, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாக புகாரில் சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரணையிலும் மேற்படி விபரத்தை சொல்லியுள்ளேன். எதிரி பாலா என்ற பாலமுரளி கிருஷ்ணா " அவருடன் சிலரும் பதிவு எண் இல்லத வெள்ளை நிற Hyundai creta காரில் இருந்தது கொண்டு என் மகன் அரவிந்தனையும் கல்யாணக்குமாரையும முறைத்து பாத்ததாகவும், அதனால் விரைவாக பெட்ரோல் போட்டுக் கொண்டு தேவிப்பட்டிணம் சென்றுவிடலாம்" என்று விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது சாட்சி தனக்கு நியாபகம் இல்லை என்று சொல்லுகிறார். மேற்படி விபரத்தை போலிசார் என்னை 22.03.2020 ம் தேதி விசாரிக்கும்போது சொல்லியுள்ளேன். என் அப்பா பிறந்த ஊர் முந்துவார்கொண்டான். என் தாத்தா பிறந்த ஊர் சக்கரவாளநல்லூர். என் தாத்தா பெயர் காஞ்சி. சாட்சி ஆதிமூலத்தின் தாத்தா பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. என் தாத்தாவும் ஆதிமூலத்தின் தாத்தாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகாரில் மேற்படி காரை சரவணன் ஓட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் எதிரி பாலா ஓட்டியதாக தான் சொல்லியுள்ளேன். புகாரிலோ அல்லது விசாரணையிலோ மேற்படி இருசக்கர வாகனம் என் மகனுடைய வாகனம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் மேற்படி சம்பவத்தை பற்றி ஆதிமூலம் கல்யாணக்குமாரிடம் கேட்டு என்னிடம் தகவல் சொன்னதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 22.03.2020 அன்று போலிசார் என்னை விசாரித்தபோது மேற்படி சம்பவத்தை பற்றி ஆதிமூலம் கல்யாணக்குமாரிடம் கேட்டு என்னிடம் தகவல் சொன்னதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் நானும் உதவி ஆய்வாளரும் சேர்ந்து தான் மருத்துவமனைக்கு என் மகனை அனுப்பினோம் என்று சொல்லவில்லை. புகாரில் என் மகன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன். மணல் கடத்தல் வழக்கில் என்

மகன் புகார்தாரரா என்றால் இல்லை. போலிசார் விசாரிக்கும் போது எனக்கு தகவல் வந்த செல்போன் நம்பரை நான் சொல்லவில்லை. என் மகனின் செல்போன் நம்பரை போலிசாரிடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. தகவல் தெரிந்து கால் மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் செல்வதற்கு முன்பே அங்கு போலிசார் மற்றும் 10-20 பேர்கள் இருந்தார்களா என்றால் போலிசார் மற்றும் சுமார் 6-7 நபர்கள் இருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆதிகேசவ பெருமாள் கோவில் ஆர்ச் அருகே ரோடு வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நான் சென்றபோது போலிசார் மற்றவர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் புகாரை கொரனா காரணமாக கால தாமதமாக கொடுத்ததாக எனது புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் சொன்னது போல் 1 வது எதிரிக்கும் என் மகனுக்கும் எந்த விரோதமும் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. மணல் கடத்தல் புகார் கொடுத்தது சம்மந்தமாக என் மகனுக்கும் 1வது எதிரிக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகனின் பிரேதத்தை வாங்க மாட்டேன் என்று சொல்லி நானும் என் ஊர்க்காரர்கள் மற்றும் சமூதாய கட்சியாளர்களுடன் சேர்ந்து சாலை மறியல் போராட்டம் செய்தோம் என்றால் எதிரியை கைது செய்ய கோரி போராட்டம் செய்தோம். முதல் விசாரணையில் நான் விபத்து பற்றி சொன்னது அனைத்தும் நான் கேள்விப்பட்டது தான் என்றால் சரிதான். 1வது எதிரி மற்றும் மற்ற எதிரிகளும் நண்பர்கள் என்றும், வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னால் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் தான், ஆனால் நண்பர்கள் தான். என் மகனின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் நான் அதை மறுக்கிறேன். என் மகனுக்கு இறப்பு விபத்தினால் ஏற்பட்டது என்றால் அதை நான் மறுக்கிறேன். நான் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே இந்த சம்பவத்தை பற்றி புகார் கொடுக்கப்பட்டிருந்தது என்றும் அது விபத்து என்று கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, அது விபத்து இல்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட புகார் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நானும் என்னுடைய சமுதாய கட்சிகள் மறியல் செய்த பின்பு என்னிடம் புகார் பின்னிட்டு பொய்யாக புகார் பெறப்பட்டு மேற்படி எதிரிகள் மீது பொய்யாக மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

அதனால் தான் இந்த வழக்கு காலதாமதமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 6,7 எதிரிகளின் பெயர்களை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை முதன்முதலில் விசாரிக்கும்போது 4 வது எதிரி இளையராஜாவைப்பற்றி வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். 22.03.2020 அன்று என்னை ஆய்வாளர் மற்றும் டிஎஸ்பியும் விசாரித்தார்கள். என் சகோதரி சென்னையில் காவல் துறையில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பு என் சகோதரி இராமநாதபுரம் வந்து விட்டார் என்றால் சரிதான். புகாரை நான் தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்தேன். புகார் எழுதிய பேப்பரை என் பையன்கள் வாங்கி வந்தார்கள். எனக்கு ஆங்கிலம் தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். புகாரை எழுதி கொடுக்க என் சகோதரி உதவி செய்தாரா என்றால் இல்லை. புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. புகாரில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட காரின் பெயர் நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் வேறு காரின் பெயரை எழுதிவிட்டு அதை அடித்துவிட்டு Hyundai creta என்று எழுதினேன் என்றால் சரியல்ல. புகாரில் " பிரிக்ஸா" என்று தமிழில் எழுதினேன் என்றால் இல்லை. புகார் போலிசாரும் என் சகோதரியும் சேர்ந்து தயாரித்தது என்றால் சரியல்ல. புகார் பதற்றத்தோடு எழுதியது போல் தோன்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. கொரனா காலத்தில் உணவு கடைகள் தவிர வேறு கடைகள் திறக்கப்படவில்லை என்றால் சரிதான். அதனால் நான் சொன்னது போல் என் மகன் உதிரி பாகம் வாங்க இராமநாதபுரம் வந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வடவயல் என்ற கிராமத்தில் அமீர்கான் என்பவர் உள்ளார் என்றால் சரிதான். அமீர்கானும் கல்யாணக்குமாரும் சேர்ந்து என் மகனை கொலை செய்துவிட்டதாக சிபிசிஐடி விசாரணை கோரி மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று மாலை அமீர்கான் என் மகனை தன்னுடைய காரில்

இராமநாதபுரம் அழைத்து வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சிகள் ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர் என்னுடைய சாதியைச் சேர்ந்தவர்கள் உறவுக்காரர்கள் இல்லை. சாட்சி ஆதிமூலம் தேவிப்பட்டிணம் காந்திநகரில் உள்ளார் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் கருப்பன் கோவில் மற்றும் முனீஸ்வரன் கோவிலும் உள்ளது என்றால் சரிதான். இரண்டு கோவில்களிலும் பூசாரிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மிக அருகில் சாட்சி விஜயகுமாரின் வீடுதான் உள்ளது என்றால் சரிதான். கொரானா காலம் என்பதால் செக் போஸ்டை தாண்டி செல்ல வேண்டும் என்றால் பாஸ் வைத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் கொரானா விதிமுறைகள் இருந்ததால் செக் போஸ்ட் அருகே போலிசார் பேரிகார்ட் தடுப்பு வைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. பாஸ் எடுக்க வேண்டும் என்பதும் போலிஸ் பேரிகார்ட் போட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் சம்பவ நேரத்தில் சாட்சிகள் ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர்கள் பஸ்ஸ்டாப்பில் இருந்ததாக சொல்லியுள்ளேன். சம்பவ காலம் கொரானா காலம் என்பதால் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. மறுநாள் முதல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஊரடங்கு அமலில் இருந்ததால் பேருந்துகள் இயக்க அனுமதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தேவிப்பட்டிணம் காந்திநகரில் பஸ்ஸ்டாப் இல்லை. மருத்துவமனைக்கு அருகில்தான் இருக்கிறது. தேவிப்பட்டிணம் காந்திநகருக்கும் சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பிற்கும் சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும் என்றால் இல்லை. 1 1/2 முதல் 2 1/2 கி.மீ தூரம் இருக்கும். காந்திநகர் பஸ்ஸ்டாப்பிற்கும் தேவிப்பட்டிணம் அரசு மருத்துவமனைக்கும் இடையே சுமார் 300 மீ தூரம் இருக்கும். காந்திநகரிலிருந்து இராமநாதபுரத்திற்கு பஸ்ஸில் வரவேண்டும் என்றால் தேவிப்பட்டிணம் மருத்துவமனை அருகில் உள்ள பஸ் நிறுத்தத்தில்தான் பயணிகள் ஏறுவார்கள் என்றால் சரிதான். காந்திநகரிலிருந்து சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பிற்கு வந்து பயணிகள் யாரும் பஸ்ஸில் ஏறமாட்டார்கள் என்றால் சரிதான். அந்த சாலையில் உள்ள மூன்று கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் வெளியில் போடப்பட்ட வளைவுகளில்

சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றும், வாட்ச்மேன் இருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி கல்யாணக்குமார் என் வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர், உறவினர் இல்லை என் சாதிக்காரர். என் மகன் இராமநாதபுரம் வந்தபிறகு அவர் இருசக்கர வாகனத்தை கல்யாணக்குமார் என்பவர் மூலம் நான் கொடுத்து அனுப்பினேன் என்றால் சரியல்ல. கல்யாணக்குமார் என் மகனை எங்கோ இருந்து அழைத்து வந்தபோது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் உடன் பிறந்த தம்பி பெயர் பூமிராஜன். சாட்சி ஆதிமூலம் போன் செய்தபின்பு நானும் என் தம்பி பூமிராஜன் மற்றும் என்னுடைய உறவினர்களும் சம்பவ இடத்திற்கு சென்றோம். என் உறவினர்களும் அங்கு இருசக்கர வாகனத்தில் வந்திருப்பார்கள். என் வீட்டிற்கும் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்திற்கும் இடையே சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கவில்லை. தகவல் தெரிந்துதான் தேவிப்பட்டிணம் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் ஆதிமூலம் சொல்லிதான் வந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு போகும் முன்னே இறந்து போன என் மகனையும், காயம்பட்ட கல்யாணக்குமாரையும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். எந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்றபோது ஏற்றி சென்ற வாகனத்தையும் அதன் ஓட்டுநரையும் நான் அன்று பார்க்கவில்லை. அது என்ன வண்டி என்று கேட்டால் வழியில் வந்த வோல்ஸ் வேகன் வண்டி. அந்த வண்டியின் ஓட்டுநர் யார் என்று நான் கேட்கவில்லை. என் மகனுக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டதால் சம்பந்தப்பட்ட காரிலும் இரத்தக்கரை இருந்திருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் சென்றபிறகு என் மகனை அந்த காரில் ஏற்றினேன். அப்போது நான் போட்டிருந்த சட்டை, வேஷ்டியிலும் இரத்தக்கரை இருந்தது என்றால் இரத்தம்பட வாய்ப்பில்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை, நான் சொல்வதுபோல் புகார் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை, நானும் மற்றும் உறவினர்களும் மறியல் செய்ததை தொடர்ந்து போலிசார் பொய் வழக்கு பதிவு செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று வேலு மாணிக்கம் பெட்ரோல் பல்க்கில் என் மகன் பெட்ரோல் போடவில்லை என்றால் சரியல்ல. என்

மகன் அரவிந்தனையும், காயம்பட்ட கல்யாணக்குமாரையும் ஒரே நேரத்தில்தான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை எதிரிகள் 4,5 ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

A8 தரப்பு குறுக்கு விசாரணை :–

இந்த வழக்கு சம்பந்தமாக தகவல் முதன் முதலில் நான் என் வீட்டில் இருந்தபோது இரவு 10.45 க்கு போன்மூலம் கிடைத்தது. என் மகன் அரவிந்தனிடமும், கல்யாணக்குமாரிடமும் போன் இருந்தது என்றால் சரிதான். என் மகன் மயக்கமாக இருந்ததால் எனக்கு போன் செய்யவில்லை என்றால் சரிதான். கல்யாணக்குமாரும் எனக்கு போன் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு யாரிடமிருந்து எந்த எண்ணில் இருந்து தகவல் வந்தது என்பதை போலிசார் என் போனை வாங்கி பார்க்கவில்லை. சம்பவம் பற்றி தகவல் அறிந்து கல்யாணக்குமாரின் உறவினர்களும் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். கல்யாணக்குமாரோடு அவரது உறவினர் மாரிதாஸ் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு முதன்முதலில் மருத்துவமனையில் தகவல் கிடைத்ததாகத்தான் புகாரில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கல்யாணக்குமார் ஆதிமூலத்திற்கு தகவல் சொன்னார் என்பதும் ஆதிமூலம் எனக்கு சொன்னார் என்பதும் பொய் என்றால் சரியல்ல. என் மேல் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தின் குற்ற எண். 309/2020 வழக்கு பதிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் JM No. I நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கின் புகாரில் அமீர்கான் என்பவர் இறந்த என் மகன் அரவிந்தனை கடைசியாக அழைத்து சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லி கம்பியால் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வழக்கானது அமீர்கான் என் மகனை கூட்டிச்சென்றாரா என்று நான் கேட்டதை தொடர்ந்து ஏற்பட்ட வழக்கு ஆகும். அமீர்கானையும், காயம்பட்ட கல்யாணக்குமாரையும் எதிரிகளாக சேர்க்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று என் மகன் உதிரிபாகங்களை வாங்குவதற்காக மட்டும்தான் இராமநாதபுரத்திற்கு வந்தான். தேவிப்பட்டிணத்தில்

மாரிநாடார் கடை, 12 ஏக்கர் முஸ்லீம் கடை போன்ற உதிரி பாகம் விற்கும் கடைகள் உள்ளதால் அதற்காக இராமநாதபுரம் வரவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு தேவையான உதிரி பாகங்கள் அந்த கடைகளில் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் இறந்த என் மகன் வாங்கிவந்த உதிரி பாகங்கள் இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. 8 வது எதிரியின் பெயரை புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன விதிகளுக்கு முரண்படும் வகையில் வாகனத்தை ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்பதும் அதனால் மோட்டார் வாகன இழப்பீடு கேட்க முடியாது என்பதால் இந்த வழக்கை நான் தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. முதன் முதலில் போலிசார் என்னை விசாரிக்கும்போது காயம்பட்ட இருவரும் பேச்சு மூச்சின்றி இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி குறுக்கு விசாரணை எதிரிகள் 4,5 ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

Spl.SC.No. 12/2020 Dated:. 25.09.2023

அ.சா. 2 ஆதிமூலம்

A1 to A8 present.

311 மனுவின் கீழ் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கட்டிட தொழில் செய்து வருகிறேன். நான் கான்ட்ராக்ட் அடிப்படையில் கட்டிட வேலை செய்து வருகிறேன். என்னிடம் சம்பவ காலத்தில் சுமார் 10 நபர்கள் வேலை செய்தார்கள். சம்பவ சமயத்தில் பக்கத்து ஊரில் எனக்கு நிறைய வேலைகள் இருந்தன. நான் எல்லா வேலைகளையும் மேற்பார்வையிட தனியாக ஒரு பைக் வைத்திருந்தேன். என் பணிக்கு தேவைப்படும் பொருட்களை தேவிப்பட்டிணத்தில் வாங்கிவிடுவேன் அங்கு கிடைக்கவில்லை என்றால்தான் இராமநாதபுரம் வருவேன். திருப்பாலைக்குடியிலிருந்து தேவிப்பட்டிணம் வழியாக இரவு 8.15 மணிக்கு வந்து இராமநாதபுரத்திற்கு 8.45 மணிக்கு வருவது தான் கடைசி டவுன் பஸ் என்றால் சரிதான். பவானி என்ற பிரைவேட் பஸ் திருவாடானையிலிருந்து புறப்பட்டு இரவு 10.15 க்கு தேவிப்பட்டிணத்தை கடந்து 10.40 மணிக்கு இராமநாதபுரம் புது பஸ்ஸ்டாப்பிற்கு வந்துவிடும் என்றால் சரிதான். 20.03.2020 ல் கொரானா ஊரடங்கு அறிவித்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த ஊரடங்கு விதிகளின்படி என் ஊரிலிருந்து பக்கத்து ஊருக்கு செல்லக்கூடாது. ஏதாவது அவசரமாக போக வேண்டும் என்றால் பாஸ் கொடுத்து தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். 20.03.2020 அன்று இரவு 8 மணியில் இருந்து பொதுப்போக்குவரத்து நிறுத்தப்பட்டது என்றால் சரிதான். தற்போது சாட்சி அதுபற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். தேவிப்பட்டிணம் சக்கரவாளநல்லூரில் எங்கள் சமுதாயத்தை சேர்ந்த நிறைய உறவினர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். சாட்சி முனியாண்டி எனக்கு மாமா உறவுமுறை. சாட்சி காளிதாஸ் எனக்கு மச்சினன் உறவுமுறை. சாட்சி

வைரவகேசு என் பக்கத்து ஊர்க்காரர். தொழிலில் பழக்கம் எனக்கு உறவினர் இல்லை. வைரவகேசுவின் தாத்தா சக்கரவாளநல்லூர் சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் அணிந்திருக்கும் மூக்கு கண்ணாடி தூரப்பார்வை மற்றும் கிட்டப்பார்வை இரண்டிற்கும் அணிந்துள்ளேன். சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அமாவாசை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவ தினத்தன்று இரவு 10.40 மணிக்கு எதற்காக அந்த பஸ் நிறுத்தத்தில் இருந்தேன் என்று கேட்டால் என் தாயார் உடல் நலம் சரியில்லாமல் இராமநாதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்க்க செல்வதற்காக பஸ் நிறுத்தத்தில் இருந்தேன். போலிசார் இந்த வழக்கில் என்னை ஒரு முறை விசாரித்தார்கள். விசாரித்த நாள் எனக்கு ஞாபகமில்லை. போலிஸ் விசாரித்தபோது என் அம்மாவைப் பார்ப்பதற்காக இராமநாதபுரம் செல்ல அந்த பஸ் நிறுத்தத்தில் இருந்தேன் என்று சொன்னேனா என்று கேட்டால் போலிசார் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. சாட்சி முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர் சக்கரவாளநல்லூரைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் இருசக்கர வாகனம் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தபோது எதிரி சேதுபதியைத் தெரியும் என்று சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரிக்கும்போது ஊதா-கருப்பு கலர் கலந்த பல்சர் பைக் என்று சொல்லியுள்ளேன். என்னை முதன்முதலில் போலிசார் விசாரிக்கும்போது Hyundai Creta கார் என்று நான் சொல்லியுள்ளேன். ஒரு வண்டியை இடித்து தள்ளுவதற்கும் அணைத்து தள்ளுவதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியும். போலிஸ் விசாரிக்கும்போது இருசக்கர வாகனத்தில் கார் மோதியதால் டமார் என்று சத்தம் வந்ததாக சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரிக்கும்போது கல்யாணக்குமாரை மெதுவாக வரக்கூடாதா என்று கேட்டேன், அதற்கு கல்யாணக்குமார் நாங்கள் மெதுவாகத்தான் வந்தோம் அரவிந்தனுக்கு வேண்டாதவர்கள் பின்னாடி வந்து மோதிவிட்டார்கள் என்று நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை.

முதன்முதலில் போலிஸ் விசாரிக்கும்போது கல்யாணக்குமாரிடம் என்ன நடந்தது என்று கேட்டு அ.சா.1 டம் தகவல் சொன்னதாக சொல்லியுள்ளேன். நான் போலிசுக்கு தகவல் சொல்லவில்லை. சுமார் 15 நிமிடத்தில் தேவிப்பட்டிணம் SI அங்கு வந்துவிட்டார். என்னிடம் அவர் என்ன நடந்தது என்று கேட்டாரா என்றால் பக்கத்தில் உள்ள ஆட்களிடம் கேட்டார். என்னிடம் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை. கல்யாணக்குமாரிடம் SI பேசிக்கொண்டிருந்தார். கல்யாணக்குமார் சொன்னதை SI எழுதிக்கொண்டாரா என்றால் நான் பார்க்கவில்லை. என்னிடம் போலிஸ் முதலில் விசாரிக்கும்போது நான் விபத்து ஏற்பட்ட பிறகு வாகனம் இராமநாதபுரம் நோக்கி சென்றுவிட்டதாக மட்டுமே நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நான் சம்பவ நேரத்தில் பஸ்ஸ்டாப்பில் இல்லை என்றால் சரியல்ல. அன்று இரவு 8 மணிக்கு ஊரடங்கு அமலுக்கு வந்துவிட்ட காரணத்தால் இராமநாதபுரத்திற்கு பஸ்ஸில் செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதும் நான் பஸ்க்காக பேருந்து நிறுத்தில் இருந்தது என்பது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் இந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய செல்போன் நம்பரை போலிசார் விசாரித்து பெறவில்லை. அ.சா.1 எனக்கு நெருங்கிய உறவினர் என்றும் நான் வழக்கிற்காக உறவினர் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவருக்காக பதிவு செய்யப்பட்ட வழக்கில் அவருக்கு அனுசரனையாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்திவைக்கப்படுகிறது.

Sd/- B.C.Gopinath

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)